Cambridge Assessment International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2025**

INSERT **1 hour 30 minutes**

*3353966551-I*

**INFORMATION**
- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

NL 342783
© UCLES 2025

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–13** on the Question Paper.

விமலனது பெற்றோருக்கு நல்ல கல்வியறிவு இருந்த போதிலும் மின்னணுவியல் (எலக்ட்ரானிக்) உபகரணங்களில் அறிவு மிகவும் குறைவு. மின்னணுவியல் உபகரணங்கள் பொதுவாக உடல் நலத்துக்கு ஆபத்தானவை என்பதும் இளைய சமூதாயத்தைச் சீரழிவுப் பாதையில் நடத்திச்செல்பவை என்பதும் அவர்களது கருத்தாக இருந்தது. அதனால் விமலனையும் மின்னணுவியல் உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கும் மிகுந்த கட்டுப்பாடுகளை விதித்தார்கள்.

விமலனுக்குத் தனது பாடசாலை நண்பர்களைப் போல் சில சமூக வலைத்தளங்களைப் பாவிப்பதற்கும் சில இணைய விளையாட்டுக்களை விளையாடுவதற்கும் மிகவும் விருப்பம் இருந்தது. நண்பர்கள் இவற்றைப்பற்றியெல்லாம் பாடசாலையில் பேசும்போது விமலன் அமைதியாக இருந்து கேட்பான். சில சமயங்களில் மின்னணுவியலில் உள்ள தனக்கான அறியாமையை எண்ணிக் கவலையும் கொள்வான். எனினும், தனது பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாகச் செயல்படுவதற்கும் அவர்களது மனம் வருந்தும்படி நடப்பதற்கும் அவனுக்கு விருப்பமில்லை.

விமலன் சிறு வயதாக இருக்கும்போது பெற்றோர்களின் கட்டுப்பாடு பெரிதாகத் தாக்கத்தை அவனுக்குள் ஏற்படுத்தவில்லை. ஆனால், அவன் உயர்கல்வி கற்கத் தொடங்கியபோது மின்னணுவியலுக்கான அவனது தேவைகளும் பயன்பாடுகளும் அதிகரித்தன. பாடசாலைப் பாடங்களுக்கான குறிப்புகளை எடுப்பதற்கும், நண்பர்களுடன் விரைவாகத் தொடர்புகளை மேற்கொள்வதற்கும், உலக அறிவைப் பெறுவதற்கும் அவனுக்கு சமூக வலைத்தளங்களின் தேவை அதிகமாக இருந்தது. தனது பெற்றோருக்கு மின்னணுவியலின் நன்மைகளைப் பற்றி அறிவுறுத்த வேண்டிய தேவைக்கு விமலன் தள்ளப்பட்டான். அவர்களது மனம் வருந்தாத வகையில் எப்படி இதனைச் செய்யலாம் என்று விமலன் சிந்திக்கத் தொடங்கினான். சமூக வலைத்தளமானது பிறரோடு தொடர்பு கொள்வதற்கும், கருத்துப் பரிமாறுவதற்கும் மற்றும் பொது விடயங்களைக் கற்பதற்குமானது என்பதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும் என்று அவன் விரும்பினான்.

இதனால், சமூக வலைத்தளத்தைச் சமுதாய நன்மைக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்று அவன் சிந்திக்கத் தொடங்கினான். விமலனுக்கு இயல்பாகவே சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதிலும் சூழல் மாசடைதலைக் குறைப்பதிலும் மிகுந்த ஈடுபாடு இருந்தது. உள்ளூர்ப் பூங்காவுக்கு வருபவர்களது கவனக்குறைவு காரணமாக அப்பூங்காவில் குப்பைகள் கொட்டப்படுவது அவனைப் பலமுறை சிந்திக்க வைத்தது. எனவே, தனது உள்ளூர்ப் பூங்காவின் உயர் அதிகாரியுடன் கலந்துரையாடி அப்பூங்காவுக்கான சமூக வலைத்தளம் ஒன்றை அவன் அறிமுகப்படுத்தினான்.

அந்த சமூக வலைத்தளத்தில் பல உள்ளூரைச் சேர்ந்தவர்கள் இணைந்து கொண்டார்கள். அவர்களது துணையுடன் அப்பூங்காவைச் சுத்தப்படுத்தும் வேலையை அவன் ஆரம்பித்தான். இது விமலனுக்கு ஊரில் நல்ல பெயரையும் புகழையும் ஏற்படுத்தியது. விமலனது இந்தச் செயல் பெற்றோருக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. சமூக வலைத்தளத்தின் உதவியுடன் விமலன் சிறுவயதிலேயே பலரையும் இணைத்துப் பணியாற்றுவதும், உள்ளூர்ச் சமூகத்துக்குத் தொண்டு செய்கின்றமையும், உள்ளூர் மக்களால் விரும்பப்படுகின்றமையும் அவனது பெற்றோர்களுக்குப் பெருமையைக் கொடுத்தது. சமூக வலைத்தளங்களினால் தீமைகள் இருப்பினும் பல நன்மைகளும் அதனால் உண்டு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். காலம் மாறுவதற்கேற்ப புதிய பாதையில் காலடி எடுத்து வைக்கும் இளையவர்களை அதிகம் கட்டுப்படுத்துவது அவர்களுக்குத் தீங்காக அமையக்கூடும் என்பதையும் சமூக வலைத்தளங்களினால் கெடுதிகள் பல இருந்தாலும் பல நன்மைகளும் உள்ளன என்பதையும் அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.